Dinamani - 26/07/2023

# 90% உயர்கல்வி நிறுவனங்களில் மாதிரிப் பாடத் திட்டம் நடைமுறை

**சென்னை, ஜூலை 25:** தமிழகத்தில் 90 சதவீத உயர்கல்வி நிறுவனங்கள் மாதிரிப் பாடத்திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளதாக உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அமைச்சர் க.பொன்முடி செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழக சட்டப்பேரவையில் கடந்த 2021-ஆம் ஆண்டு ஆக.26-ஆம் தேதி அறிவித்தபடி பாடத்திட்ட மறுசீரமைப்பு பணி மேற்கொள்ளப்பட்டது. மாதிரி பாடத்திட்டம், பல்கலைக்கழகம் மற்றும் தன்னாட்சிக் கல்லூரிகளின் தன்னாட்சி உரிமைக்கு பாதிப்பில்லாத வகையில் உருவாக்கப்பட்டிருக்கிறது.

பல்கலைக்கழகங்கள் மற்றும் தன்னாட்சி கல்லூரிகளின் உரிமையை தமிழக அரசு மதித்து அங்கீகரிக்கிறது.

மாணவர்களுக்கு பயன்படும் வகையில், மாதிரி பாடத்திட்டம் மறுசீரமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம் கடந்த ஓராண்டாக மேற்கொண்ட முயற்சியால் ஐ.ஐ.டி., அண்ணா பல்கலைக்கழகம், 10 கலை- அறிவியல் பல்கலைக்கழகங்கள், தன்னாட்சி கல்லூரிகள் மற்றும் இதர கல்லூரிகளிலிருந்தும் 922 பேராசிரியர்களைப் பாடத்திட்டக்குழு உறுப்பினர்களாகக் கொண்டு 870 பாடத்திட்டக்குழு கூட்டங்கள் நடத்தப்பட்டு, தொழில் துறையினரின் ஆலோசனைகள் பெறப்பட்டு, மிகத் தரமான முறையில் 301 மாதிரி பாடங்கள் (166 இளநிலை பாடங்கள், 135 முதுநிலை பாடங்கள்) மறுசீரமைக்கப்பட்டுள்ளன.



தொழில் துறை வல்லுநர்களுடன் கலந்து ஆலோசித்து வளர்ந்து வரும் தொழில் துறை தேவைகளுக்கு ஏற்ப, புதிய மாதிரிப் பாடத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் தயாரித்த மாதிரி பாடத்திட்டங்களை பல்கலைக்கழக பாடத்திட்டக் குழுக்களின் (Board of Studies) ஒப்புதலுடன் நடைமுறைப்படுத்துமாறு தன்னாட்சி கல்லூரிகள் உள்ளிட்ட அனைத்து இணைவு பெற்ற கல்லூரிகளுக்கும் பல்கலைக்கழகங்கள் அனுப்பிவைத்தன. இதன் அடிப்படையில், 90 சதவீத உயர்கல்வி நிறுவனங்கள் மாதிரிப் பாடத்திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளன.

இளநிலை பட்டப்படிப்புக்கான பாடத்திட்டத்தில் பகுதி-1-இல் மொழி; பகுதி-2-இல் ஆங்கிலம்; பகுதி 3-இல் முக்கியப் பாடங்கள் மற்றும் விருப்பப்பாடங்கள்; பகுதி 4-இல் திறன் மேம்பாட்டுப் பாடங்கள்; பகுதி-5-இல் மதிப்பு கூட்டுக் கல்வி ஆகிய ஐந்து பிரிவுகள் இடம்பெற்றுள்ளன.

## தன்னாட்சி கல்லூரிகளுடன் ஆக.2-இல் ஆலோசனை

இது குறித்து அமைச்சர் பொன்முடி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: 2023-24 கல்வி ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பாடத்திட்டத்தில் ஏதேனும் நடைமுறைச் சிக்கல்கள் இருப்பின், ஆண்டு இறுதியில் கல்வியாளர்களுடன் கலந்து ஆலோசித்து சரி செய்யப்படும்.

மாதிரி பாடத்திட்டம் தொடர்பாக, அனைத்து தன்னாட்சிக் கல்லூரி முதல்வர்களுடன் ஆக.2-ஆம் தேதி உயர்கல்வித் துறை அமைச்சர் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடத்தப்படும்.

தன்னாட்சி கல்லூரிகளின் உரிமைக்கு பாதிப்பு இல்லாமல் அவர்களின் கருத்துகளை கேட்டு தீர்வு காணப்படும். மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்த மாதிரி பாடத்திட்டம் தன்னாட்சிக்கு பாதகமில்லாமல் உருவாக்கப்பட்டு, அனைத்து பல்கலைக்கழக துணைவேந்தர்களுடன் நடத்தப்பட்ட இரு கூட்டங்களில் விவாதிக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படுகிறது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.